இந்து சமயம் மற்றும் அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான பி.கே.சேகர்பாபு நேற்று (09.06.2025), பிராட்வே பேருந்து நிலையத்தில் பல்நோக்கு ஒருங்கிணைந்த பேருந்து வளாகம் (Multi Model Facility) அமைப்பதை முன்னிட்டு, தற்காலிகமாக பேருந்து நிலையம் அமைக்க ஏதுவாக, இராயபுரம் மண்டலம், வார்டு-59க்குட்பட்ட டி.என்.பி.சி. சாலையில் உள்ள காலிமனையினைப் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது, மேயர் திருமதி ஆர்.பிரியா, ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், துணை ஆணையாளர் (பணிகள்) வி.சிவகிருஷ்ணமூர்த்தி, மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி கழக நிர்வாகிகள் கூட்டம் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் – சென்னைத் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர் மா.சுப்பிரமணியன் முன்னிலையில் பள்ளிக்கரணை 200 அடி சாலையில் உள்ள பி.ஆர்.பேலஸில் நேற்று (9.6.2025) கழக துணைப் பொதுச்செயலாளர் ஆ.இராசா எம்.பி., ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் நாடாளுமன்ற உறுப்பினர் முனைவர் தமிழச்சி தங்கபாண்டியன், சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அரவிந்த்ரமேஷ், பாலவாக்கம் க.சோமு, மாவட்ட கழக நிர்வாகிகள் பாலவாக்கம் த.விசுவநாதன், மாவட்ட தகவல் தொடர்பு பொறுப்பாளர் ஓ.சுந்தரம், தொகுதி பொறுப்பாளர் சந்திரபாபு, பகுதி கழக செயலாளர்கள் பெருங்குடி எஸ்.வி.ரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஒன்றிய கழக செயலாளர் கோவிலம்பாக்கம் வெங்கடேசன், பொதுக்குழு உறுப்பினர் எஸ்.ஏ.அரிகிருஷ்ணன் மற்றும் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் பா.அருண்குமார், எம்.பார்த்திபன், டாக்டர் அனீஷ் உள்ளிட்ட பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், மாவட்ட பிரதிநிதிகள், பகுதி அணிகளின் அமைப்பாளர்கள் கலந்துகொண்டனர்.

கழக துணை பொதுச் செயலாளர் ஆ.ராசா எம்.பி. பங்கேற்பு!

சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பெரம்பூர், ஆர்.கே.நகர், இராயபுரம் தொகுதிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

மாவட்டப் பொறுப்பாளர் ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!

சென்னை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட பெரம்பூர், ஆர்.கே.நகர் மற்றும் இராயபுரம் ஆகிய சட்டமன்ற தொகுதிகளின் நிர்வாகிகளுடன் கலந்துரையாடல் கூட்டம் கீழ்கண்ட அட்டவணைப்படி நடைபெறும்.

வ. எண்	சட்டமன்ற தொகுதி	நாள் / நேரம்	இடம்
1	பெரம்பூர்	11-06-2025 காலை 10.00 மணி	தமிழ் பேலஸ் E.H ரோடு
2	ஆர்.கே.நகர்	11-06-2025 காலை 11.00 மணி	எண்.478, T.H ரோடு, தண்டையார்பேட்டை (அப்போலோ மருத்துவமனை அருகில்)
3	இராயபுரம்	11-06-2025 காலை 12.00 மணி	M.K.S மஹால், சிமெட்ரி ரோடு, வண்ணாரப்பேட்டை

மேற்கண்ட கூட்டங்களில் நாடாளுமன்ற உறுப்பினர், அந்தந்த தொகுதிக்குட்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், மாநில நிர்வாகிகள், தொகுதி பார்வையாளர்கள், மாவட்ட நிர்வாகிகள், பகுதி செயலாளர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், வட்டச் செயலாளர்கள், பகுதி - வட்ட நிர்வாகிகள் மற்றும் அனைத்து அணிகளின் மாவட்ட அமைப்பாளர்கள், இளைஞர் அணி மாவட்ட துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

ஆர்.டி.சேகர் எம்.எல்.ஏ.
பொறுப்பாளர், சென்னை வடக்கு மாவட்ட தி.மு.க.

கள்ளக்குறிச்சி – திருக்கோவிலூர் – தி.அத்திப்பாக்கம்

ஏரியில் விழுந்து உயிரிழந்த சிறுவனின் குடும்பத்திற்கு ஆறுதல் - நிதி உதவி!

முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

சென்னை, ஜூன் 10- கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், தி. அத்திப்பாக்கம் கிராமத்தி லுள்ள உள்ள ஏரியில் தவறி விழுந்து உயிரிழந்த சிறுவ னின் பெற்றோருக்கு ஆறு தல் மற்றும் நிதியுதவியை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் அறிவிப்பு வரு மாறு:-

கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் வட்டம், தி. அத்திப்பாக்கம் கிராமத்தைச் சேர்ந்த சஞ்சீவி - நித்யா தம் பதியரின் மகன் செல்வன் தாரகேஷ் (வயது 10) என்ப வர் மேற்படி கிராமத்தி லுள்ள பெரிய ஏரியில் உறவினர்க ளுடன் குளிக்கச் சென்ற போது எதிர்பாராதவிதமாக தவறி விழுந்து உயிரிழந் தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகுந்த வருத்தமும் வேதனையும் அடைந்தேன். மேலும் இச் சம்பவத்தில், உயிரிழந்த சிறுவனின் பெற்றோருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலை யும், ஆறுதல்களையும் தெரி வித்துக்கொள்வதோடு, அவ ரது பெற்றோருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச் சரின் பொது நிவாரண நிதியி லிருந்து வழங்கிடவும் உத்த ரவிட்டுள்ளேன்.

இவ்வாறு முதல்வர் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்துள்ளார்.

மூத்த பத்திரிகையாளர் ஏ.பி.மோகன் மறைவு! முதல்வர் பொது நிவாரண நிதியிலிருந்து

பத்திரிகையாளர் குடும்ப உதவிநிதியாக ரூ.10 லட்சம்!

காசோலையினை - ஏ.பி.மோகன் துணைவியார் திருமதி ருக்மணியிடம் - செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் வழங்கினார்!

சென்னை, ஜூன்.10- மறைந்த மூத்த பத்திரி கையாளர் ஏ.பி.மோகனின் மனைவி திருமதி அ.ருக் மணி அவர்களிடம், தமிழ் நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உத்தரவுப்படி, செய்தி மக்கள் தொடர்புத்துறை இயக்குநர், முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகை யாளர் குடும்ப உதவி நிதி யாக ரூ.10 இலட்சத்திற் கான காசோலையினை வழங்கினார்.

அதன் விபரம் வருமாறு:

'மக்கள் குரல்' மூத்த செய்தி யாளரும், சென்னை பத்திரி கையாளர் மன்ற உறுப்பின ருமான ஏ.பி.மோகன் (66) கடந்த 29.5.2025 சென் னையில் இயற்கை எய்தி னார்.

முதலமைச்சர் அவர்கள் 29.5.2025 அன்று விடுத்த இரங்கல் செய்தியில், 'மக்கள் குரல்' பத்திரிகையில் 40 ஆண்டுகளுக்கும் மேலாகப் பணியாற்றி மறைந்த மூத்த பத்திரிகையாளர் ஏ.பி. மோகன் அவர்களின் மறை விற்கு இரங்கல் தெரிவித்தது டன், அவரது குடும்பத்தின ருக்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்தி ரிகையாளர் குடும்ப உதவி நிதியாக பத்து இலட்சம் ரூபாய் வழங்கப்படும் என அறிவித் தார்கள். அதனைத் தொடர்ந்து, மறைந்த பத்திரி கையாளர் ஏ.பி.மோகன் அவர்களின் சட்டப்படியான வாரிசுதாரருக்கு முதல மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூபாய் பத்து இலட்சம் பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதி வழங்க அனுமதித்து அரசாணை பிறப்பிக்கப்பட்டது. முதல மைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உத்தரவினை நிறைவேற்றும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத் துறையின் இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், 'மக்கள் குரல்' நாளிதழில் பணியாற்றி மறைந்த மூத்த பத்திரிகையா ளர் ஏ.பி.மோகன் (வயது 66) இல்லத்திற்கு நேற்று (9.6.2025) சென்று, அவரு டைய மனைவி திருமதி அ.ருக் மணியிடம், பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக முதல மைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து ரூ.10,00,000/- க்கான (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) காசோலையினை வழங்கினார்.

இந்நிகழ்வில், செய்தி மக் கள் தொடர்புத் துறையின் கூடுதல் இயக்குநர் (செய்தி) ச.செல்வராஜ் உடனிருந்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் உத்தரவின்படி, செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், நேற்று (09.06.2025) மீஞ்சூரிலுள்ள மறைந்த மக்கள் குரல் மூத்த செய்தியாளரும், பத்திரிகையாளர் மன்ற உறுப்பினருமான ஏ.பி.மோகன் அவர்களின் இல்லத்திற்கு நேரில் சென்று, முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து பத்திரிகையாளர் குடும்ப உதவி நிதியாக ரூபாய் பத்து இலட்சத்திற்கான காசோலையினை அவரது மனைவி திருமதி அ.ருக்மணி அவர்களிடம் வழங்கினார். இந்நிகழ்வில் செய்தி மக்கள் தொடர்புத் துறை கூடுதல் இயக்குநர் ச.செல்வராஜ் உடனிருந்தார்.

சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் மத்தியப்பகுதி மாணவரணி ஏ.திருமலை ஏற்பாட்டில், மத்தியப்பகுதி செயலாளரும் மண்டலக்குழு தலைவருமான ஏ.வி.ஆறுமுகம் முன்னிலையில் மாவட்டக்கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ்.சுதர்சனம் தலைமையில் 1000 நபர்களுக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் எம்.எம்.செந்தில், வட்டக்கழக செயலாளர்கள் வ.முத்துசாமி, மு.செல்வம், சாலை.டி.கணேசன், த.ச.கரிகாலச்சோழன், கேபிள். தா.வேல்கணேசன், ஆர்.உதயராஜ், த.ச.எழிலன், ஆர்.டி.ரமேஷ்குமார், எம்.எஸ்.நாகலிங்கம், சஞ்சீவி, ஸ்ரீதர், கிருஷ்ணமூர்த்தி, செல்வராஜ், பா.மகேந்திரன், கு.சுரேஷ், ஏ.வி.முருகன், கதிரவன், பி.தாமோதரன், மங்கைலட்சுமி, தரணிபாபு, சுந்தர், தயாலன், ஜெயா, லட்சுமி, சக்கரபாணி, சி.எம்.பாபு, தினகரன், நடராஜன் மற்றும் இளைஞரணி, மகளிரணி, மாணவரணி, கழக முன்னோடிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

கே.எஸ்.வெல்டிங்ராஜா தலைமையில்

ஜெ.அன்பழகன் நினைவுநாள்: 132 'அ' வட்டத்தில் உணவு!

ஜெ.கருணாநிதி எம்.எல்.ஏ. -கே.ஏழுமலை - கார்த்திகா பாஸ்கர் வழங்குகின்றனர்!

சென்னை, ஜூன் 10 -

132 அ வட்டச் செயலாளர் கே.எஸ். வெல்டிங்ராஜா வட்டக் கழகத்தினருக்கு விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

தியாகராயநகர் மேற்கு பகுதி132 "அ"வட்டத்தில், ஜூன் 10ல் மறைந்த மாவீரன் ஜெ. அன்பழகன் அவர்களின் நினைவு நாளை முன்னிட்டு தென்மேற்கு மாவட்ட கழக செயலாளர் மயிலை தா.வேலு. எம்.எல்.ஏ. ஆலோசனைப்படி இன்று (10.6.2025 செவ் வாய்க்கிழமை) பகல் 11 மணி அளவில் ரங்கராஜபுரம் பிர தான சாலை அக்ஷயா சூப்பர் மார்க்கெட் எதிரில் பொதுமக்க ளுக்கு அறுசுவை உணவை வட்டக் கழக செயலாளர் கே. எஸ்.வெல்டிங்ராஜா எனது தலைமையில், தியாகராயநகர் சட்டமன்ற உறுப்பினர் ஜெ.கரு ணாநிதி. தியாகராய நகர் மேற்கு பகுதிகழக செயலாளர் கே.ஏழுமலை.எம்.சி. திருமதி பா.கார்த்திகாபாஸ்கர்.எம். சி. ஆகியோர் வழங்குகின்றனர்

ஆகவே இந்த நிகழ்ச்சியில் வட்டத்திற்குட்பட்ட செயற்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள், பகுதி கழக நிர் வாகிகள், மாவட்ட பிரதிநிதிகள், வட்டக் கழக நிர்வாகிகள், பகுதி பிரதிநிதிகள், இளைஞர் அணி, மாணவர் அணி, மகளிர் அணி, மகளிர்தொண்டர்அணி, சுற்றுச் சூழல்அணி, வழக்கறிஞர் அணி, ஆதிதிராவிடர் அணி, இலக்கிய அணி, வர்த்தக அணி, தொண்டர் அணி, சிறு பான்மை அணி , பொறியாளர் அணி, தகவல் தொழில் நுட்ப அணி, தொழிலாளர்அணி பாக முகவர்களின்அணி, அமைப்பா ளர், துணை அமைப்பாளர்கள், தொ.மு.சா தொழிலாளர் தொழில் சங்கம் கழகத்தின் இந் நாள் முன்னாள் நிர்வாகிகள் கழக முன்னோடிகள் அனைவ ரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு வட்டச் செயலா ளர் கே.எஸ்.வெல்டிங்ராஜா கேட்டுக்கொள்கிறார்.

மாநகராட்சி பூங்காக்களுக்கு நெகிழிக் குப்பைகளிலிருந்து

மறுசுழற்சி செய்து தயாரிக்கப்பட்ட பூங்கா இருக்கைகள்!

பிளாஸ்டிக் உற்பத்தியாளர்கள் மேயர் ஆர்.பிரியாவிடம் வழங்கினர்!

சென்னை, ஜூன்.10-

தமிழ்நாடு பிளாஸ்டிக் உற் பத்தியாளர்கள் சங்கத்தின் சார் பில் நெகிழிக் குப்பைகளிலி ருந்து மறுசுழற்சி செய்து தயா ரிக்கப்பட்ட 100 பூங்கா இருக் கைகளை பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காக்களுக்கு வழங்குவதன் அடையாளமாக 42 இருக்கைகளை இச்சங்கத் தின் நிர்வாகிகள் ரிப்பன் கட்ட வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச் சி யில் நேற்று (9.06.2025) மேயர் ஆர். பிரியாவிடம் வழங் கினார்கள்.

தமிழ்நாடு பிளாஸ்டிக் உற் பத்தியாளர்கள் சங்கம் பிளாஸ் டிக் கழிவுகளை மறுசுழற்சி செய்து பெருநகர சென்னை மாநகராட்சிப் பூங்காவின் பயன்பாட்டிற்காக முதற்கட்ட மாக 100 இருக்கைகள் வழங் கப்பட்டது. மேலும், தேவைப்ப டும் பூங்காக்களுக்கான இருக் கைகள் இச்சங்கத்தின் சார்பில் வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்ச்சியில், கூடுதல் ஆணையாளர் (சுகாதாரம்) டாக்டர் வி. ஜெயசந்திர பானு ரெட்டி, நிலைக்குழுத் தலைவர் (பொதுசுகாதாரம்) டாக்டர் கோ. சாந்தகுமாரி, தமிழ்நாடு பிளாஸ் டிக் உற்பத்தியாளர்கள் சங்க நிர் வாகிகள் பாபு ஸ்ரீனிவாசன், பி.சுவாமிநாதன் மற்றும் அலு வலர்கள் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

கடலூர் கி. கோவிந்தராசன்
ஜூன் 10 (1998)

கடலூர் நகரத்தில் தென்னிந்திய நலஉரிமைச் சங்கம் – திராவிடர் கழகம் இவற்றில் துவக்கக் கால உறுப்பினராக இருந்ததைத் தொடர்ந்து, தி.மு.கழகத்திலும் ஆரம்பகால உறுப்பினரானார்.

கடலூர் நகரக் கழகச் செயலாளராக தொடர்ந்து 40 ஆண்டுகாலம் பணியாற்றியவர்.

நேருவுக்கு கருப்புக் கொடி, மும்முனைப் போராட்டம், இந்தி எதிர்ப்பு போராட்டம், விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் ஆகிய இப்போராட்டங்களில் பங்கேற்று கடுங்காவல் சிறைதண்டனை பெற்றவர்.

தந்தை பெரியாரின் சீடராக – பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக – தலைவர் கலைஞரின் உற்ற உடன்பிறப்பாக விளங்கியவர்.

தலைவர் கலைஞர் அவர்களின் கரத்தால் மிதிவண்டி பரிசு பெற்று, "அடிமட்டத் தொண்டனை கழகம் மதிக்கத் தவறாது" என தலைவர் கலைஞரால் பாராட்டப்பட்டவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சேப்பையன் (எ) எல்.ஆறுமுகம்
ஜூன் 10 (2024)

1952ஆம் ஆண்டு கழகத்தில் உறுப்பினராகி கழகப் பணியாற்றியவர்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தஞ்சை சட்டமன்றத் தொகுதியில்போட்டியிட்டபோது, மிட்டா, மிராசுகளின் தாக்குதல்களை முண்டாசு கட்டிக் கொண்டு எதிர்த்து நின்று கழகப் பணியாற்றியதால் கலைஞர் அவர்களால் "முண்டாசு சேப்பையன்" என்று அழைக்கப்பட்டவர்.

தொடர்ந்து பத்தாண்டுகள் மன்னார்குடி நகர்மன்ற உறுப்பினராக தேர்ந்தெடுக்கப்பட்டு பணியாற்றி, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம் உள்ளிட்ட கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.